உ

சிவகணபதி துணை.

தேவி சகாயம்.

சீதக்கமங்கலம்

# ஸ்ரீ பிரமாணிக்க அம்பாள்

# தோத்திரப் பாமாலை.



இஃது

திருபுவனம்

S. கந்தசாமி படையாக்ஷியாரவர்களால்

இயற்றப்பெற்றதை

மேலப்பிடாகை

R. சேது பத்தர் அவர்களால்

திருவாரூர்

“... அச்சுக்கூடத்தில்” பதிப்பிக்கப்பெற்றது.

1927.

03

Q25:38.M1

M27

178249

உ

சிவமயம்

சிதக்கமங்கலம்

# ஸ்ரீ வீரமாணிக்க அம்பாள்

# தோத்திரப் பாமாலை.

## விநாயகர் துதி—வெண்பா.

தித்திக்கும் தேனே செங்கரும்பின் நின்சுவையே
பத்திக்கு நல்ல பவரசமே—முத்திக்கு
வித்தே மூலாதாரப் பொருளே
நத்தினேன் ஐங்கரநின் றருள்.

---

## கீர்த்தனம்—பல்லவி.

ஐயா மோதகம் ஏந்துங் கையா—கருணைசெய்யாய்

## அநுபல்லவி.

துய்யா சாமளவர்ண மெய்யா அங்குசபாச
சுக்கிலாம் பாதர சசிவர்ணதேவா—சுகிர்த ரஞ்சித கணபதிவாவா.

## சரணங்கள்.

(1) குணமததாகவே மணவெளியிலமரும் நாதனே உனை
யநுதினம் துதித்திடும் அடியவர்க்கருள் நவநீதனே
பரிதிமதிதரித்த பரமன்றனக்குப் பாலா
அரிச்சந்திர பிள்ளையாராய் யாவர்க்கும் வந்தாய்
அடியவர் மிடிநீக்கி அருள்தனைத் தந்தாய் (ஐயா)

(2) அப்பமோ டவல்பொரி முப்பழமொடு கொண்டு வந்தேனே
ஒப்பி உன்மலரடி செப்பியென்குறைகளை நின்றேனே
எப்பாவங்கள் செய்தாலும் அப்பாவந் தன்னை நீக்கி
செப்பும் கந்தசாமிக்குன் சேவையைத் தருவாய்
சேவித்த பேர்களுக்குன் சேவடி தருவாய் (ஐயா)

---

## ஷண்முகன்பேரில் — கீர்த்தனை.

(ஞானுந்தொண்டன் குருநாதா—என்ற வர்னமெட்டு).

### பல்லவி.

ஷண்முகனே குருநாதா
சாரும் தொண்டர்க்கருள்செய்ய ஏனின்னும் வாதா (ஷண்)

### அநுபல்லவி.

சிவ சரவணபவ அறுமுக குக
குருபரனென்ன அடியவர்பணி (ஷண்)
அசுர சண்டரை கண்டுமே கொன்றிட
தெண்டாயுதம் கரம்நின்றிட (ஷண்)

காட்டில் சடுதியில்தினைப்புனவனமதில்
நொடியினில் மணமதுமுடிவுற (ஷண்)
உமை சந்ததம் உந்தனை வந்துநான்
வந்தனம் தந்திட்டேன் கந்தனே (ஷண்)

### சரணங்கள்.

1. சூரரை வேறறச்செய்திட்ட வய்யனே
சொர்ன வள்ளிக் கிசைந்த முருகய்யனே
பாராமுகம் ஏனோ பன்னிரு கையனே
பார்வதிக்கு சுதனுகவந் துய்தோனே
பஞ்சைமீது வஞ்சகங்கள் செஞ்சிடாமல் வந்திடுவாய்
தஞ்சமென்றேன் கந்தசாமி சந்ததமும் தந்திடுவாய். (ஷண்)

---

(சுஜன ஜீவன—என்ற வர்னமெட்டு).

### பல்லவி.

குமரஷண்முகா வேட
குமரியின் சுகா —யோகா

### அநுபல்லவி.

அமரர் காவலா கொடி
யழகு சேவலா
அமரா முத்துக்குமரா சூரசமாரா ஓடிவா—யோகா —(குமர)

### சரணங்கள்.

சேதினிபுரத்தில் காருண்யமுற்றுவாழ் சிவனருள் பாலா
அருந்தேவி மீனுக்ஷி சுந்தரேசர் செல்வனின்சீலா
சந்ததம்புவி கந்தசாமி சொல்கவி
சரவணோற்பவ அறுமுக குக குருபரா யுவா தேவா —(

---

மாரியம்மன்பேரில் கீர்த்தனம். (வனஜாக்ஷி என்ற வர்னமெட்டு).

பல்லவி.

மகமாயி—வசீகர சுந்தர—மகமாயி

அநுபல்லவி.

மாக்ஷி ஆக்ஷி நீலாக்ஷி சூக்ஷி திரு (மகமாயி)

சரணங்கள்.

1. மேலப்பிடாகையினில் விளங்கிடும் மாரி
வேண்டியுன் பாதத்தை வேணபேர்கோரி
சாலப்பணிவோர்க் கருள்தாரும் கெம்பீரி
சங்கரி சாம்பவி சத்தி சடாக்ஷரி
துங்க மஹேஸ்வரி துர்க்கை யகோரி (மகமாயி)

2. சாமள அசுர சங்காரி வெஞ்சினத்தி
சந்ததம் தொண்டர்க்கு அருள்தரும் சமர்த்தி
கோமள குங்கும குரும்பைப் பொற் ஸ்தனத்தி
கொடுப்பாய் புத்தி குமரி சித்தி
அடுத்தேன் கத்தி அருள்வாய் சத்தி (மகமாயி)

3. மல்லிகை முல்லை ரோஜா மருவு செந்தாழை
மலர்களைக்கொண்டுனது மலரடித் தாளை
சொல்லி யர்ச்சித்து உன்னைத் தொழுதிடும் ஏழை
துயரமூட்டி கிருபை யூட்டி
அருள்பாராட்டி யருள் சீமாட்டி. (மகமாயி)

4, இந்தப்புவியோர் போற்ற வந்த நல் வாமி
ஏழையானேன் சொல்லை இகழாமல் பூமி
சந்தக்கவிகள் சொல்லி சாரும் கந்தசாமி
தமிழினை யொத்து தரணிக்கோர் வித்து
அழகிய முத்து அருள்மாரி முத்து (மகமாயி)

---

சேதினிபுரம் சிவபிரான் தோத்திரம்.

(புள்ளிக்கலாபமயில்—என்ற வர்னமெட்டு).

சேதினிபுரத்தில் வாழும் ஈசா—உனைச்
சேவித்தேன் மீனாக்ஷிசுந்தரேசா உன்றன்
சிற்கமல பொற்பதத்தை எப்பொழுதும் ஒப்பி துதித்தேனே
—உமைநாதனே.

2. பாவ புண்ணியங்களென்னும் கன்மம் ஒத்து
பாரில் வருமோ மானிட ஜென்மம் இன்னும்
பாவம் புரியாமல் உன்னைமேவும்படியாக என்னைப்
பாரும் அருள்தாரும்.

3. கங்கையைச் சடையில் தரித்தோனே வருங்
காமனைக் கண்ணாலே எரித்தோனே புணர்
மங்கையர்க்குத் தானுமொரு பங்கதைக் கொடுத்து உணர்ந்தோனே
சொல்வேன் நானே.

4 கத்துகடல் சூழுந் தஞ்சைபூமி தமிழ்
கவிமழை பொழியும் கந்தசாமி உந்தன்
கஞ்சமலர் பொற்பதத்தைத் தஞ்சமென் றடைந்தேன் சிவகாமி
மகிழ் நேமி.

178249

---

## ஸ்ரீ பிரமாணிக்க அம்பாள்—ஆசிரிய விருத்தம்.

எண்ணிரண்டாறுகலை சீதளச்சந்திரமுகம் எழில் கொந்தளக்குழையுடன்
இளமுத்துவூறலும் புன்சிரிப்பும் பவள இதளமிர்த மொழிமதுரமும்
விண்ணிலம் கதிர் இரவி மேனியும் வார்கொண்ட விம்மிய ஸ்தனபாரமும்
வீரகண்டாமணி பாதார விந்தமுடன் விரைவினில் காணவருவாய்
கண்ணனும் பிரமனும் குலிசனும்தேடியே காணவரிதான பொருளே
கங்காளி திரிசூலி வாராகி சாமுண்டி கருணாகடாக்ஷ வதனி
நன்னிலம் தாலூக்கா சீதக்கமங்கலம் நலமுடனமர்ந்த ராணி
நம்பினேன் கந்தசாமிக்கு என்றென்றும் நவிலுவாய் பிரமாணியே.

---

கீர்த்தனை. (அடிக்கடி வருந்தாதே என்ற வர்னமெட்டு.)

1. தென்னிந்தியாதனிலே புகழோங்கும்—நல்ல
தென்னைக் கதலி பலா தழைத்தோங்கும்
நன்னிலம் தாலூக்கா சீதக்கமங்கலம்
தன்னிலமர்ந்திடும் பிரமாணி—எங்கள்
தாயே ரக்ஷிப்பாய் மகராணி.

2. சந்ததம் திருமலை நீராடி—உந்தன்
சந்நிதி வருபவர்கள் வெகுகோடி
கொக்கு மந்தாரையும் கொன்றை இருவாக்ஷி
பக்குவமாக சாத்திப் பணிந்தேனே பசும்
பாலபிஷேகச் செழுந்தேனே.

3. பேச்சி பெரியாச்சி உனைக்கோறி—அரும்
பேதை மனத்தால் வந்தேன் எனைப் பாரீர்
காக்ஷிகொடுத்திட தாக்ஷியம் செய்யாதே
ஆச்சி உன்னையல்லாது யார் காக்க வேறு
ஆதரவில்லை எங்கள் முகம் பார்க்க.

4. பாத்திரம் அறிந்தன்னமிடுவாயே—ஞான
பக்தருக்கே முக்தி தருவாயே—ஜெம்பு
கோததிரமதனில்கோறி விளங்கிய
சாமிநாதன் என்னும் தவப்பாலன்—கந்த
சாமி யாவர்க்கும் நல்ல குணசீலன்.

---

ஓரடிப்பதம்.

அம்பாள் கண்பார் மனோகரி மக ராஜ ராஜேஸ்வரி—அம்பாள்
மன்னுதிமன்னர்கள் மகிழும் ராணி
மனம்வைத்தாளுவாய் ஏ! பிரமாணி
தென்புடன் சீதக்கமங்கலம் தோணி
தெரிசனம் செய்வோர்க்கு சேவைதா வாணி
ருணமிது சிறுவன் தனைக்காவாய் திரிசூலி
வர்மம்செய்யவேண்டாம் இப்போ வருவாய் நீ கபாலி.
சங்கரி சாம்பவி கௌரி சத்தி சடாக்ஷரி வீரி
துங்க மகேஸ்வரி வாமி துர்க்கை சாமுண்டி அகோரி (அம்பாள்)

---

## ஸ்ரீ வேங்கடத்தண்ணன்பேரில் கீர்த்தனை.

(ஆரோஸய்யா—என்ற மெட்டு.)

வேங்கடத்தண்ணா வேண்டினேன் மலர்க்கண்ணா
வீணனைக் கார்த்தருள்வாய் இந்நாள்
வினைமுழுதையு மறுத்துனதடிசேர்த்திடு மன்னா
வேதாகம நீதிமுறை மேதினியில் போதித்தருள் (வேங்கடத்

---

## ஸ்ரீ பிரமாணிக்கத்தம்பாள்பேரில் கும்மி.

தந்தினந் தானத னன்னானே தனந்
தானத்தந்தினந் தன்னானே
தந்தினந்தானத னன்னானே தனந்
தானத்தந்தினம் தன்னானே.

1 செல்வி பிரமாணியம்மன் மீதில் யானும்
தேன்மொழியே ஒரு கும்மிசொல்ல
வல்லவிநாயகன் பொற்கமலங்களை
வாழ்த்திக்கும்மி யடியுங்கடி.

2. ஆனைமுகவ னடிபோற்றி எங்கள்
ஆறுமுகவனின் தாள்போற்றி
காலையும் மாலையும் பூசிக்கும் ஈசனின்
காரிகை மாயன் பதம்போற்றி.

3. ஆண்டு 22—5—1927 ஆம் அதில்
ஆனதோர் வைகாசி 9 தனில்
பாண்டியனீன்ற பிரமாணி யம்மனின்
பாலபிஷேகத்தைப் பாருங்கடி.

4. நாராயணய்யரும் நற்பதம் பெறவே
நாடி பிரமாணி ஆலயத்தை
தேடி திருப்பணி செய்துமுடித்ததோர்
தீவிரத்தைக் கண்ணால் பாருங்கடி.

5. சீதக்கமங்கலம் நன்னகராம் அது
செல்வமிகுந்திடும் பொன்னகராம்
பாதகம்நீக்க அமர்ந்த பிரமாணியின்
பாதத்தைப்போற்றி யடியுங்கடி.

6. அம்ம னின்பேரை யுரைத்திடவே ஆதி
ஜென்மத்தில்செய்த பழியகலும்
இம்மை மறுமையில் செய்த வினைநீக்கி
இன்பம்தரும் கெம்பீரியடி.

7. பில்லிசூனியமும் பேய்முறைக்காய்ச்சலும்
பேதபயித்திய வயிர்வலியும்
சொல்லித் தரிக்கப் பறக்குமடி அந்த
சுந்தரிதந்த பஞ்சாக்ஷரத்தை.

17821.9

8. ஆலயத்திலுள்ள அர்ச்சித தேவதை
அல்லோரையும் நம்ம ளுள்ளமதில்
காலையும் மாலையும் பூசித்திட செய்த
கர்மவினை பறந்தோடுமேடி.

9. வேங்கடத்தண்ணன் துரைமகனும் அவர்
வேதப்பரியேறும் நன்மகனும்
பாங்குடன் கையில் பிரம்பெடுத்துநிற்கும்
பூாலகுமரனைப் பாருங்கடி.

10. தொட்டியச்சின்னனும் தூண்டிக்காரண்ணனும்
சொல்லுக்கடங்கா மதுரைவீரன்
மட்டிலடங்காக் குறவன் குறத்தியும்
மன்னன் பாவாடையைப் பாருங்கடி.

11. எந்தநேரமும் ஷண்முகநாதனைச்
சிந்தையில் எண்ணிடும் கந்தசாமி
சொந்தமுடன்சொல்லி வந்த கவியதைச்
சந்தோஷமாகக் கொண்டாடுங்கடி.

12. வேலும் மயிலும் மிகவாழி நல்ல
வேதனும் நாதனும் தான்வாழி
நாளும் பிரமாணி கீர்த்தனைக் கும்மியை
நம்பிப் படிப்பவரும் வாழி.

---

திருப்பணி கர்த்தரின்பேரில்—விருத்தம்.

சீர்மருவு சோழநகர்தன்னிலே சீதக்குமங்கலம் சிறந்த நகராம்
திகழுறும் பிரம்மகுலம் சிவமதம்தன்னிலே ஜனித்திட்ட பூபாலனும்
நார்மருவு குகனடிமையாம் அப்பாவையர்தம் நற்றவப்பேற்றில் வந்தோர்
நாடொப்ப நாராயணய்யரெனப் பேர்கொண்ட நளினமன குணசீலர்
ஏர்மருவு பெட்டிவண்டிக் குதிரை பீட்டனே டேறுதண்டிகை விநோதர்
ஈதலொடு நல்லொழுக்கம் பொறுமையாதிக ளியற்கையிலமைந்தபுண்யர்
பார்மருவு சைவதிலகர் பரமபக்திமான் பகர்கல்வி செல்வயோகர்
பாதிமதி தரித்தோனின் அருளினால் பகரும் சம்பத்துடன் வாழி வாழி.

முற்றிற்று.